IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.47/2022
Deposition of Witness for DW1.

Name : திருமதி.ராதா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.06.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.
முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் பிரதிவாதி பிரபு எனது உடன் பிறந்த தம்பியாவார் நான் அவரின் அதிகார முகவர். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 04.04.2012 தேதியிட்ட எனது தாயார் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெட் பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா–ஆ 1, 30.01.2015 தேதியிட்ட கூட்டு அவகாச விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் பி.வா.சா–ஆ 2, 09.07.2024 பிரதிவாதி பெயரில் உள்ள தனி பட்டா பதிவிறக்கம் செய்யப்பட்டது பி.வா.சா–ஆ 3( இந்த பட்டா வழக்கு தாக்கல் செய்தபிறகு பெறப்பட்டது என்ற காரணத்தால் வாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) 01.10.2022 தேதியிட்ட பிரதிவாதி பெயரில் உள்ள கரதீர்வை பி.வா.சா–ஆ.4, பிரதிவாதியின் Building Plan Approval பி.வா.சா–ஆ 5.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.